கொள்கையில் உறுதியையும் - களப்பணியையும் - அர்ப்பணிப்பையும் தமது நூற்றாண்டு வாழ்வால் எடுத்துக்காட்டியவர் சோ.மா.இராமச்சந்திரன்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியில் புகழாரம்!

சென்னை, அக். 31-

அண்ணாநகர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சோ.மா.இராமச்சந்திரன் (வயது 100) அவர்கள் நேற்று இயற்கையெய்தினார் என்ப தினை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

அச்செய்தியில் கழகத் தலைவர் அவர்கள், கொள்கையில் உறுதியையும், களப்பணியில் அர்ப்பணிப்பையும் தமது நூற்றாண்டு வாழ்வால் எடுத்துக் காட்டியவர் சோ.மா.இராமச்சந்திரன் அவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

நூறாண்டுகளைக் கடந்து வாழ்ந்த கழகத்தின் மூத்த முன்னோடியும், முன் னாள் சட்டமன்ற உறுப்பினருமான சோ.மா. இராமச்சந்திரன் அவர்கள் மறைவெய்திய செய்தி மிகுந்த துயரமளிக்கிறது.

எளிய தேநீர்க் கடை நடத்தி, தமது கடின உழைப்பால் உயர்ந்து, திராவிட இயக்கக்



கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்தவர். மிசா சிறைவாசம் கண்டவர். 30 ஆண்டுகள் பகுதிச் செயலாளராகவும், ஒரு முறை அண்ணா நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் மக்கள் பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர். கொள்கையில் உறுதியையும் களப்பணியில் அர்ப்பணிப்பையும் தமது நூற்றாண்டு வாழ்வால் எடுத்துக்காட்டிய வர். அவரது நெடிய கழகப் பணியைப் போற் றும் வகையில், கடந்த ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் அவருக்குக் கலைஞர் விருது வழங்கிச் சிறப்பித்தோம்.

கடந்த ஆண்டு அவரது இல்லத்திற்கே நேரில் சென்று, நூறாவது பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தபோது அவர் காட் டிய அன்பும் மகிழ்ச்சியும் இன்றும் என் நெஞ் சில் நிறைந்திருக்கின்றன.

கழகத்தின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த அவரது நெடிய பொதுவாழ்வு இன்று நிறைவுற்றிருக்கிறது. அவர் விட்டுச் சென்ற கொள்கைத் தடமும் தொண்டறமும் என்றும் நமக்கு வழிகாட்டும்!

சோ.மா.இராமச்சந்திரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், உற வினர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவ ருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறு தலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி யில் குறிப்பிட்டுள்ளார்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; காங்கிரஸ் கூட்டணி இல்லேண்ணா தி.மு.க. இவ்வளவு இடங்களில் வெற்றி பெற்றிருக்காதுன்னும், தமிழ்நாட்டில் இப்போதுதான் காமராஜர் ஆட்சி நடக்குதுன்னும் மந்திரி விஸ்வநாதன் பேசி இருக்காரே பார்த்தியா!

பட்டணம் : **ஆமாமய்யா; நன்றி கெட்ட ஜென்மத்துக்கு எடுத்துக்காட்டு அவங்கெல்லாம். காமராஜர் ஆட்சியிலே இப்படியா தினம் தினம் கொலை, கொள்ளை, கற்பழிப்பெல்லாம் நடந்தது. பெருந்தலைவர் காமராஜரை இப்படியா அசிங்கப்படுத்தறது. என்ன பண்றது. பதவி படுத்தும் பாடு; அப்படி பேசச் சொல்லுது.**

அண்ணா நகர் பகுதி

மூத்த கழக முன்னோடி சோ.மா.ராமச்சந்திரன் மறைவு!

தயாநிதிமாறன் எம்.பி. அஞ்சலி – இரங்கல்!

சென்னை, அக். 31-

அண்ணாநகர் பகுதி மூத்த கழக முன்னோடி சோ.மா.ராமச்சந்திரன் மறைவுக்கு கழக விளை யாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநி திமாறன் எம்.பி. நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, பின்னர் கீழ்கண்டவாறு இரங்கல் செய்தி வெளி யிட்டுள்ளார்.

கழகத்தின் ஆணிவேரை இழந்து தவிக்கின்றோம்!

அண்ணா நகர் தொகு தியின் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரும், அண்ணா நகர் பகுதிக் கழ கத்தின் முன்னாள் செய லாளரும், நூற்றாண்டு கண்ட பெருமைக்குரியவ ருமான பெரியவர், திரு. சோ. மா. ராமச்சந்திரன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சி யுற்றேன்.

அண்ணா நகர் சட்ட மன்றத் தொகுதியில் முத்த மிழறிஞர் கலைஞர் அவர் கள்போட்டியிட்டபோது, சோ. மா. ராமச்சந்திரன் அவர்கள் ஆற்றியப் பணி அளப்பரியது, கழகம் நடத் திய பல்வேறு போராட் டங்களில் பங்கேற்றதுடன் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்திலும், திரா விட முன்னேற்றக்கழகத் தின் இரு வண்ணக் கொடியை அண்ணாநகரில் உள்ள அனைத்து வீதிகளி லும் பட்டொளி வீசி பறக் கச் செய்த செயல்மறவர்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமான பேராசிரியர், எனது தந்தை முரசொலி மாறன், அண்ணன் ஆற் காட்டார், கழகத்தலைவர் தளபதி உள்ளிட்ட அனை வரோடும் நெருங்கிப் பழ கிய, கழகத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவ ரான அண்ணன் சோ.மா. அவர்களை இழந்து வாடும் கழகத்தினருக்கும், அவரது குடும்பத்தின ருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தயாநிதி மாறன், எம்.பி. தனது இரங்கல் செய்தியில் குறிப் பிட்டுள்ளார்.



அண்ணாநகர் பகுதிக் கழக மூத்த முன்னோடி மறைந்த சோ.மா.ராமச்சந்திரன் அவர்களின் உடலுக்கு கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. மலர் அஞ்சலி செலுத்தினார்.

1926-2026



கண்ணீர் அஞ்சலி

முன்னாள் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர்
ஒருங்கிணைந்த அண்ணாநகர் பகுதி செயலாளர்
தலைமை செயற்குழு உறுப்பினர்.

திரு.

சோ.மா.இராமச்சந்திரன்

Ex.MLA அவர்கள்...

30.10.2026 வெள்ளிக்கிழமை அன்று மதியம் 01.30 மணியளவில் இயற்கை எய்தினார். அன்னாரது இறுதி ஊர்வலம் 31.10.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அரும்பாக்கம் மயானத்தில் நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரியாவிடை ஊர்தி.....

குடும்பத்தினர்கள் & உறவினர்கள்